செ. கு. எண்: 10 நாள்: 13.01.2021

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்களின் இரங்கல் செய்தி – 13.1.2021

மாண்புமிகு முன்னாள் அமைச்சரும், முன்னாள் பொங்கலூர் சட்டமன்ற உறுப்பினருமான அன்பு சகோதரர் திரு. பி.வி தாமோதரன் அவர்கள், உடல் நலக் குறைவு காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில், நேற்று (12.1.2021) காலமானார் என்ற செய்தியை அறிந்து நான் மிகுந்த வேதனை அடைந்தேன்.

அன்பு சகோதரர் திரு. தாமோதரன் அவர்கள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது பற்றும், கழக கொள்கைகளின் மீது உறுதியும் கொண்டவர். கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் கலந்து கொண்டவர்.

ஆரம்ப காலத்திலிருந்தே கட்சியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு மக்களின் நலன்களுக்காக பாடுபட்டவர். அனைவரிடமும் விருப்பு, வெறுப்பின்றி அன்புடன் பழகும் பண்பாளர். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சகோதரர் திரு. தாமோதரன் அவர்களை கால்நடைத் துறை அமைச்சராக தனது (2001–2006) அமைச்சரவையில் இடம்பெறச் செய்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

அன்பு சகோதரர் திரு. தாமோதரன் அவர்களின் மறைவு அவர்தம் குடும்பத்தினருக்கு மட்டுமல்லாமல், எனக்கும், கழக உடன்பிறப்புகளுக்கும், பேரிழப்பாகும். அன்னாரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரது ஆன்மா இறைவன் திருவடி நிழலில் இளைப்பாற எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கிறேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**